

தேனி மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்ட சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் நடைபெற்ற சர்வதேச மனித உரிமைகள் தின விழிப்புணர்வு கருத்தரங்கில் கலெக்டர் ரஞ்ஜீத்சிங் குழந்தை திருமணத்தை தடுத்தல் என்ற கருப்பொருளை கொண்டு நிலைக்காட்சிப் படுத்திய மாணவியர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

# நத்தம் அரசு கலைக்கல்லூரியில் கருத்தரங்கம்



**நத்தம், டிச.11-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சர்வதேச பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு கருத்தரங்கம் நடந்தது.

இதற்கு கல்லூரி முதல்வர் ராஜாராம் தலைமை தாங்கினார்.

குற்ற புலனாய்வுத்துறை உதவி ஆய்வாளர் ஈஸ்வரி, குழந்தை கடத்தல் தடுப்பு பிரிவு சிறப்பு உதவி ஆய்வாளர் மகாலெட்சுமி, வரலாற்றுத்துறை பேராசிரியை உஷா, அறிவியல் துறை தலைவர் சுகன்யா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் பெணிகளுக்கு எதிரான வன்முறைகள் குறித்தும், வன்முறை காலங்களில் தங்களை தற்காத்து கொள்வது பற்றியும் கருத்தரங்கில் விளக்கி கூறப்பட்டது. இதில் ஆங்கிலத்துறை ஆசிரியை அத்திபா உள்ளிட்ட கல்லூரி பேராசிரியர்கள், மாணவிகள் கலந்து கொண்டனர்.

# பரமக்குடி காவல்துறையினருக்கு ஒத்திகை பயிற்சி



**பரமக்குடி,டிச.11-**

பரமக்குடியில் அனைத்து காவல் நிலைய காவல்துறையினருக்கு ஒத்திகை பயிற்சி நடைபெற்றது. இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் அனைத்து காவல் நிலைய காவல்துறையினருக்கு சிறப்பு ஒத்திகை பயிற்சி பரமக்குடி தனியார் பள்ளி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இப்ப பயிற்சியினை பரமக்குடி டி.எஸ்.பி ஜெபராஜ் பயிற்சியளித்தார். இதில் நடைப்பயிற்சி,ஆயுதப் பயிற்சி, லத்தி பயிற்சி, நீட் டவுன் அவுட் உள்ளிட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டது. பயிற்சியின் போது முடி திருத்தம், சீருடை,ஷூ பாலிஷ் உள்ளிட்டவைகள் சரிபார்க்கப்பட்டு இதில் சிறந்த காவல் துறையினருக்கு மாவட்ட அளவில் பரிசு வழங்க பரிந்துரைக்கப்பட்டது. புதிதாக பதவியேற்ற டிஎஸ்பி ஜெபராஜ் தனது அனுபவங்களையும், இனி தொடர்ந்து வழி நடத்தும் முறைகள் பற்றியும் சிறிது நேரம் உரையாற்றினார்.

இது குறித்து பேசுகையில் நமது காவல்துறை நண்பர்களுக்கு ஏதேனும் குறைகள் இருப்பின் உடனடியாக சரி செய்யப்படும். அதற்கு காவல்துறை ஆய்வாளர்கள் அறிக்கை அளிக்கவேண்டும். காவல்துறை பொதுமக்களுக்கு முன் உதாரணமாக செயல்படும் வகையில் இருசக்கர வாகனத்தில் செல்லும் பொழுது ஹெல்மெட் அணிவதும்,காரில் செல்லும் பொழுது சீட் பெல்ட் அணிவது ஆகியவைமுக்கியமானதாகும். அதை நாம் முதலில் கடைபிடிக்க வேண்டும். காவல்துறையினர் நலன் கருதி வழங்கப்படும் நிவாரணங்கள்ஊழியர்களுக்கு சென்று சேர உரிய முயற்சி மேற்கொள்ளப்படும்.

இது போன்ற பயிற்சிகள் தொடர்ந்து நடைபெறும் என்றார். இப்ப பயிற்சியில் அனைத்து காவல் நிலைய காவல்துறையினர் கலந்து கொண்டனர்.

# பரமக்குடி அருகே இரண்டு கார்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் இருவர் உயிரிழப்பு



**பரமக்குடி,டிச.11-**

பரமக்குடி அருகே இரண்டு கார்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர். திருப்பூர் மாவட்டம்,அவிநாசி, ராயப்பாளையத்தைச் சேர்ந்த சுப்பிரமணியன் குடும்பத்தினர் இராமேஸ்வரத்திற்கு சாமி கும்பிட காரில் பரமக்குடி நோக்கி வந்து கொண்டிருந்த பொழுது கீழப்பெருங்கரை பஸ் ஸ்டாப் அருகே வந்தபோது பரமக்குடியில் இருந்து மானாமதுரை நோக்கி வந்த மானாமதுரை மறவர் தெருவை சேர்ந்த சீனிவாசன்(60), அவரது மகள் பவித்ரா இவர்களுடைய கார் முன்னாள் சென்ற காரை முந்தி செல்ல முயன்ற பொழுது நிலை தடுமாறி சென்டர் மீடியனின் மீது கார் மோதி எதிரே வந்த சுப்பிரமணியன் குடும்பத்தினர் வந்த கார் மீது நேருக்கு நேர் மோதியது. இதில் சுப்பிரமணியன், அம்பிகா,அனுசியா மற்றும் எதிரே வந்த சீனிவாசன், பவித்ரா ஆகியோருக்கு தலையில் ரத்தக்காயம் ஏற்பட்டு பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இதில் மேல் சிகிச்சைக்காக மதுரைக்கு கொண்டு செல்லப்பட்ட சீனிவாசன் (60) செல்லும் வழியில் இறந்துவிட்டார். மேலும் தனியார் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த அவிநாசியை சேர்ந்த லட்சுமணன் மனைவி அம்பிகா (40) உயிரிழந்தார்.இச்சம்பவம் குறித்து பார்த்திபனூர் போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## எக்ஸ்கான் 2025 கண்காட்சியில் புரொப்பல் இண்டஸ்ட்ரீஸ்-ன் எலக்ட்ரிக் டிப்பர்கள் மற்றும் மொபிலிட்டி தீர்வுகள் அறிமுகம்

**சென்னை, டிச. 11-**

கிரஷிங் மற்றும் ஸ்கிரீனிங் உபகரணங்களில் இந்தியாவின் முன்னணி நிறுவனமும் மற்றும் எலக்ட்ரிக் டிப்பர் தயாரிப்பில் முன்னோடியுமான புரொப்பல் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட், தனது எலக்ட்ரிக் சுரங்க மற்றும் கட்டுமானத் துறையில் பயன்படுத்தக்கூடிய எலக்ட்ரிக் வாகனங்களின் தயாரிப்பு அணிவரிசையின் விரிவாக்கத்தை பெருமிதத்துடன் அறிவித்துள்ளது. நேற்று நடைபெற்ற எக்ஸ்கான் 2025 கண்காட்சியில், முதன்மை விருந்தினர்களான கலிங்கா கமர்ஷியல் கார்ப்பரேஷன் லிமிடெட்டின் நிறுவனரும், தலைவருமான டாக்டர் சௌமியா ரஞ்சன் சமல் மற்றும் ராஜிராஜ் மினரல்ஸ் பிரைவேட் லிமிடெட் – ன் இயக்குனர் ஜெ.ருத்ரசேகர் ஆகியோர் முன்னிலையில், நான்கு புதிய டிப்பர் மாடல்கள், முற்றிலும் புதிய கனெக்டிவிட்டிக்கான செயல்தளம் மற்றும் விரிவான விற்பனைக்குப் பிந்தைய பராமரிப்பு சர்வீஸ்க்கான ஒரு விரிவான தீர்வு ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டன. இந்த புதிய வெளியீட்டில் 90 சிஇடி, 70சிஇடி, 560எச்இவி-எக்ஸ், 470எம்இவி ஜென்-2 ஆகிய நான்கு புதிய எலக்ட்ரிக் டிப்பர்கள், பல்ஸ்.இவி என்ற புதிய இணைப்பு தளம் மற்றும் ப்ரோ இவி கேர் என்ற விரிவான மின் வாகனங்களுக்கான சர்வீஸ் ஆகியவை அடங்கும்.

இது குறித்து புரொப்பல் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் வி.செந்தில்குமார் கூறுகையில், இன்று நாங்கள் அறிமுகப்படுத்தியிருக்கும் ஒவ்வொரு புதிய செயல்தளமும், சுரங்க மற்றும் கட்டுமானத் துறைகளில் கனரக சாதனங்களுக்கு உண்மையான தேவைகளைப் பூர்த்தி செய்யும் சிறந்த தீர்வாக அமையும். உற்பத்தித் திறன், நீண்ட காலத்திற்கு சிக்கனமான இயக்கம் நம்பகத்தன்மை மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் மீதே எங்களது முழு கவனமும் இருக்கிறது என்றார். மேலும் மின்சார வாகனங்கள் விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் சேவைப் பிரிவுத் தலைவர் சித்தார்த் கிர்தனே கூறுகையில், இந்த அறிவிப்புகள் புத்தாக்கம், வாடிக்கையாளர்களுக்கு அதிக உற்பத்தித் திறன், பூஜ்ஜிய மாசு உமிழ்வு மற்றும் எதிர்காலத்திற்கு ஏற்ற கனரக வாகனத் தீர்வுகளை வழங்குவதை புரொப்பலின் அர்ப்பணிப்பை வலுவாக பிரதிபலிக்கின்றன. புரொப்பல் டிரக்குகள் ஒட்டுமொத்தமாக 5 லட்சம் மணிநேரங்களுக்கு மேல் இதுவரை இயங்கியுள்ளன. எங்களின் முதல் 8 டிரக்குகளின் தொகுப்பு, இயக்க செயல்பாட்டில் வெறும் 2 ஆண்டுகளில் 12,500 மணிநேரங்களை (நாள் ஒன்றுக்கு சராசரியாக 20 மணி நேரம்) கடந்துள்ளன என்று கூறினார்.

## வேலவன் செந்தில்குமார் ஹெச்.சி.எல். ஸ்குவாஷ் இந்தியன் டூர் சென்னை சாம்பியன் அனஹத் சிங் மகளிர் பட்டம் – 11 நாடுகளில் இருந்து 48 வீரர்கள் பங்கேற்பு

**சென்னை, டிச. 11-**

ஐந்து நாட்கள் கடுமையான போட்டிகளுக்குப் பிறகு, பிஎஸ்ஏ சாலஞ்சர் தொடரான ஹெச்சிஎல் ஸ்குவாஷ் இந்தியன் டூர் 2025–இன் சென்னை கட்டம், இந்தியன் ஸ்குவாஷ் அகாடமியில் நிறைவுற்றது. எகிப்து, இலங்கை, மலேசியா, பிரான்ஸ், ஜப்பான், இந்தியா உள்ளிட்ட 11 நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் இதில் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியின் நிறைவுவிழாவில் தலைமை விருந்தினராக திரு வி. மணிகண்டன், மாவட்ட வருவாய் அலுவலரும், பொது மேலாளர் (நிர்வாகம்)–எஸ்டிஏடி அவர்களும் கலந்துகொண்டனர்.மகளிர் இறுதிப் போட்டியில், இந்தியாவின் அனஹத் சிங், ஜோஷ்னா சின்னப்பாவை 3-2 (11-8, 11-13, 11-13, 11-6, 11-8) என மிக நெருக்கடியான செட்டில் வென்று சாம்பியன் பட்டம் கைப்பற்றினார். ஆண்கள் இறுதியில், வெலவன் செந்தில்குமார், எகிப்தின் ஆதம் ஹவாலை 3-1 (11-7, 11-9, 9-11, 11-4) என்ற கணக்கில் வீழ்த்தி, சொந்த மண்ணில் வேகம், துல்லியம், தந்திர நயம் ஆகியவற்றைக் காட்டி பட்டத்தை வென்றார்.

ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகளுக்கு தலா 15,000 அமெரிக்க டாலர் பரிசுத் தொகையுடன், முக்கிய பிஎஸ்ஏ தர வரிசை புள்ளிகளையும் வழங்கும் இந்தத் தொடர், இளம் இந்திய வீரர்களுக்கு மதிப்புமிக்க சர்வதேச வாய்ப்புகளை தொடர்ந்து வழங்கி வருகிறது.ஹெச்சிஎல் நிறுவனத்தின் ராஜத் சந்தோலியா, 2028 ஒலிம்பிக்ஸ் உள்ளிட்ட உலகளாவிய மேடைகளுக்கு வீரர்களை தயார்ப்படுத்தும் இந்த டூரின் பங்கினை வலியுறுத்தினார். எஸ்ஆர்எப்ஐ-யின் சைரஸ் பொன்ச்சா, இந்தியாவின் எதிர்கால ஸ்குவாஷ் திறன் வளத்தை உருவாக்குவதில் இதன் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டினார். ஹெச்சிஎல், எஸ்ஆர்எப்ஐ, எஸ்ஏஐ மற்றும் இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம் ஆகியவற்றின் ஆதரவுடன் நடைபெறும் இந்த டூர், இதுவரை 40-க்கும் மேற்பட்ட போட்டிகளை நடத்தி, 1,000-க்கும் மேற்பட்ட வீரர்களுக்கு பயன் அளித்து, அடுத்த தலைமுறை சாம்பியன்களை உருவாக்கும் பணியில் தொடர்ந்து முன்னேறி வருகிறது.

# இந்திய குடியுரிமை வழங்க கோரி பிரதமர் நரந்திர மோடிக்கு ஆயிரம் மனுக்களை அஞ்சல் செய்த உச்சப்பட்டி இலங்கை தமிழ் அகதிகள்



**திருமங்கலம்.டிச.11.**

இந்திய குடியுரிமை வழங்கிட கோரி உச்சப்பட்டி முகாமில் வசித்திடும் இலங்கை தமிழ் அகதிகள் ஆயிரம் மனுக்களை பிரதமருக்கு அஞ்சல் மூலம் அனுப்பி வைத்தனர்.

திருமங்கலம் அருகேயுள்ள உச்சப்பட்டியில் இலங்கை தமிழர் அகதிகள் முகாம் உள்ளது. இங்கு கடந்த 1990ம் ஆண்டு முதல் 35 வருட காலமாக 483 குடும்பங்களை சேர்ந்த 1700 பேர் வசித்து வருகின்றனர். நீண்ட காலமாக இங்கு வசித்து வரும் இவர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்கப்படாததால் பெரும் இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர். இதையடுத்து தங்களுக்கு இந்திய குடியுரிமை வழங்கிட கோரி உச்சப் பட்டி முகாமில் வசித்திடும் இலங்கை தமிழ் அகதிகள், கிராம தலைவர் விநாயக மூர்த்தி தலைமையில் வக்கீல் வாசுகி முன்னிலையில் தயார் செய்யப்பட்ட ஆயிரம் கோரிக்கை மனுக்களை திருமங்கலம் கிளை தபால் நிலையத்திலிருந்து பிரதமருக்கு அஞ்சல் செய்தனர்.

அந்த மனுவில் :உள்துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட உத்தரவின் மூலம் குடிவரவு மற்றும் வெளிநாட்டினர் சட்டம் தண்டனை விதிகளிலிருந்து எங்களுக்கு விலக்கு அளித்ததற்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.தமிழ்நாட்டில் வசிக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் சமூகத்தினரான நாங்கள், நான்கு தசாப்தங்களாக ஏங்கிக் கொண்டிருந்த எங்களுக்கு நிவாரணம் வழங்கி கருணையுடன் முடிவெடுத்ததற்காக பிரதமருக்கும் இந்திய அரசுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த முடிவு வசுதைவ குடும்பகம் என்ற கருத்தில் பொதிந்துள்ள இந்தியாவின் நீடித்த மதிப்புகளான இரக்கம், நீதி மற்றும் மனிதநேயத்தை பிரதிபலிக்கிறது. நாங்கள் 40 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவில் அமைதியாக வாழ்ந்து வருகிறோம், சமூக வளர்ச்சிக்கு பங்களிக்கிறோம் மற்றும் நாட்டின் சட்டத்தை மிகுந்த மரியாதையுடன் மதிக்கிறோம். இந்தியாவின் சமூக மற்றும் கலாச்சார கட்டமைப்பின் ஒரு பகுதியாக நாங்கள் இருக்கிறோம்.

எனவே இந்தியப் பிரதமர், 1955 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தில் சட்டவிரோத குடியேறி என்ற வரையறையிலிருந்து எங்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், எங்கள் நீண்டகால அகதி நிலையைக் கருத்தில் கொண்டு இந்திய குடியுரிமையைப் பெறுவதற்கும் வழங்குவதற்கும் ஒரு வழியை வழங்குமாறு நாங்கள் பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம். பிரதமரின் தொலைநோக்குத் தலைமையின் கீழ், இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதி சமூகத்திற்கு நிரந்தர மற்றும் கண்ணியமான தீர்வு எட்டப்படும் என்று நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறோம் என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டத்தில் வீட்டு வசதி மேம்பாட்டுக்கழகத்தின் கீழ்

# 24 பயனாளிக்கு ரூ.12 லட்சம் மதிப்பிலான மானிய ஆணைகளை கலெக்டர் வழங்கினார்



**விருதுநகர்,டிச.11-**

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், உப்பத்தூர் தமிழ்நாடு கிராம வங்கி கிளையில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழகத்தின் (தாட்கோ) சார்பில் ஆடு/மாடு வளர்ப்பு தொழில் புரிவதற்கு கடனுதவி பெற்ற 24 பயனாளிக்கு தலா ரூ.50 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.12 இலட்சம் மானியத்திற்கான ஆணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா, வழங்கினார்.

தாட்கோ நிறுவனம் மூலம் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்களுக்கு, நிலம் வாங்கும் திட்டம், சுய உதவி குழுக்களுக்கு பொருளாதார உதவி, திறன் மேம்பாட்டு பயிற்சி உள்ளிட்ட வாழ்வாதாரத் திட்டங்கள் மூலம் வங்கி கடனுதவிக்கான மானியங்களையும்,

சுகாதாரப் பணியாளர்களுக்கு விபத்துக் காப்பீட்டு, இயற்கை மரணத்திற்கு உதவி, இறுதிச் சடங்குகளுக்கு உதவி, திருமணத்திற்கான உதவி, மகப்பேறு உதவி, கண் கண்ணாடி, முதியோர் ஓய்வூதியம் உள்ளிட்ட நிதியுதவிகளையும் வழங்கி வருகிறது.

அந்த வகையில், விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், உப்பத்தூர் தமிழ்நாடு கிராம வங்கி கிளையில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழகத்தின்(தாட்கோ) சார்பில் ஆடு/மாடு வளர்ப்பு தொழில் புரிவதற்கு கடனுதவி பெற்ற 24 பயனாளிக்கு தலா ரூ.50 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.12 இலட்சம் மதிப்பிலான மானியத்திற்கான ஆணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா வழங்கினார். இந்நிகழ்வில், தாட்கோ மாவட்ட மேலாளர் மஞ்சுளா, சாத்தூர் கோட்டாட்சியர் கனகராஜ், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் பாண்டிச்செல்வன், அரசு அலுவலர்கள் மற்றும் பயனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# காளாஞ்சிபட்டி யில் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு பாராட்டு



**ஒட்டன்சத்திரம்,டிச.11-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஒன்றியத்திற்குட்பட்ட காளாஞ்சிபட்டி ஊராட்சியில் சிறப்பு தீவிர வாக்காளர் திருத்த பணியினை சிறப்பாக செய்த கிராம நிர்வாக அலுவலர் பாபு, வாக்குச்சாவடி நிலைய அலுவலர்கள் ஜெயந்தி, செந்தில்குமாரி, ராஜேஷ்குமார், உள்ளிட்டோருக்கு மத்திய ஒன்றிய செயலாளர் எஸ்.ஆர்.கே. பாலு, ஒன்றிய அவைத்தலைவர் செல்வராஜ் உள்ளிட்டோர் பாராட்டி வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

# முதுகுளத்தூரில் விவசாயிகளுக்கு போதிய உரம் வழங்க கோரி கம்யூ., கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம்




**முதுகுளத்தூர்,டிச.11-**

முதுகுளத்தூர் பேருந்து நிலையத்தில் தடையின்றி விவசாயிகளுகு உரம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுகுளத்தூர் தாலுகா குழுவின் சார்பாக விவசாயிகளுக்கு போதிய யூரியா உரம் வழங்கிடக் கோரியும், 2024-2025 ஆம் ஆண்டு மழையால் பாதிக்கப்பட்ட மிளகாய் விவசாயிகளுக்கு 100% இன்சூரன்ஸ் மற்றும் ஏக்கருக்கு இருபதாயிரம் இழப்பீடு வழங்கிடக் கோரியும், வைகை ஆற்றுத் தண்ணீரை முதுகுளத்தூர் மக்களின் வாழ்வாதாரத்திற்கு பகிர்வு உரிமை வழங்க கோரியும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து தாலுகா குழு செயலாளர் கே.கணேசன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட குழு உறுப்பினர் வி.முருகன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் தி.இராஜா ஆகியோர் கண்டன உரையாற்றினர் . தாலுகா குழு உறுப்பினர்கள் என்.சண்முகையா, ஆர்.ரஜினிகாந்த், ஆர்.தர்மலிங்கம், வி.வைஷ்ணவி, அ.முத்துமணி, விவசாயத் தொழிலாளர் சங்க தாலுகா செயலாளர் அங்குதன், பொருளாளர் முருகேசன், மூத்த தோழர் எஸ்.கே.கண்ணுச்சாமி மற்றும் பலர் கலந்து கொண்டனர். அதைத்தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் மேற்கண்ட கோரிக்கைகளை முன்வைத்து முதுகுளத்தூர் வட்டாட்சியரிடம் 320 மனுக்கள் கொடுக்கப்பட்டது.




45 வயது பெண் ஒருவரின் இருதயத்தில், இரத்தத்தை உந்தித் தள்ளும் பிரதான அறையின் உட்புறத்தில் வளர்ந்திருந்த மிக அரிதான கட்டியை, எண்டோஸ்கோப்பி முறையிலான நுண்துளை அறுவை சிகிச்சை மூலம், சிம்ஸ் மருத்துவமனையின் இருதய மற்றும் மேம்பட்ட பெருந்தமனி சிகிச்சைப்பிரிவின் இயக்குனரும் முதுநிலை ஆலோசகருமான டாக்டர் வி.வி.பாஷி வழிகாட்டுதலின்படி, இருதய மார்பறை அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ஏ.முகமது இப்ராஹிம் தலைமையிலான குழுவினர் வெற்றிகரமாக செய்து சாதனை படைத்துள்ளனர்.

### திருமங்கலம் அரசு மருத்துவமனையின்
# அவசர சிகிச்சை பிரிவு முன்பு நிறுத்தப்படும் வாகனங்களால் நோயாளிகள் கடும் அவதி




**திருமங்கலம். டிச.11-**
மதுரை மாவட்டம்,திருமங்கலம் அரசு மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவு முன்பாக தாறுமாறாக நிறுத்தப்படும் வாகனங்களால் பொதுமக்களும்,நோயாளிகளும் பெரும் அவதிக்கு ஆளாகி வருகின்றனர்.

திருமங்கலம் நகர் முன்சீப் கோர்ட் சாலையில் அரசு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.இங்கு நாள்தோறும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உள் மற்றும் வெளி நோயாளிகளாக சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.இங்கு 24மணி நேரமும் இயங்கிடும் அவசர சிகிச்சைப் பிரிவில் விபத்து உள்ளிட்ட பல்வேறு அவசர காரணங்களுக்காக சிகிச்சைக்கு வருவோருக்கு உடனடியாக முதலுதவி மற்றும் அவசர சிகிச்சையளித்து உடல்நிலையின் தன்மைக்கேற்ற உள்நோயாளியாகவோ அல்லது மதுரையிலுள்ள அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்படுவது வழக்கம்.இந்த அவசர சிகிச்சைப் பிரிவு தற்போது ஆண்கள் சிகிச்சை பெற்றிடும் உள்நோயாளிகள் வார்டில் தற்காலிகமாக செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில் திருமங்கலம் அரசு மருத்துவமனையின் தற்காலிக அவசர சிகிச்சை வார்டுக்கு சென்றிடும் வழியில் அதிகளவு இருசக்கர வாகனங்கள் நிறுத்தப்பட்டு வாகன காப்பகம் போல் காட்சியளிக்கிறது.உள்நோயாளிகள் பிரிவு உள்ளிட்ட அனைத்து சிகிச்சை பிரிவிற்கு சென்றிடும் முக்கிய வழியில் இருசக்கர வாகனங்கள் மற்றும் கார்கள் அதிகளவு நிறுத்தப்படுவதால் நோயாளிகள் செல்வதற்கும் 108 ஆம்புலன்ஸ்கள் செல்வதற்கும் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகிறது.இதனால் சிகிச்சைக்கு வரும் நோயாளிகளும்,பொதுமக்கள் பெரும் அவதிக்கு ஆளாகி வருகின்றனர். எனவே திருமங்கலம் அரசு மருத்துவமனையில் தாறுமாறாக நிறுத்தப்படும் வாகனங்களை ஒழுங்குபடுத்தி பொதுமக்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் மருத்துவமனை நிர்வாகம் செய்து தந்திட வேண்டும் என்பதே அனைவரது எதிர்பார்ப்பாக உள்ளது.

## நத்தம் அருகே வீட்டில் புகுந்த மலைப்பாம்பு



**நத்தம், டிச.11-**
திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே பன்னியாமலை- பாண்டியன்நகரை சேர்ந்தவர் செல்வம் (45). விவசாயி.இவரது வீட்டின் அருகில் நேற்று முன்தினம் இரவு 10 அடி நீளமுள்ள மலைப்பாம்பு ஒன்று ஊர்ந்து சென்று கொண்டிருந்தது. இதை பார்த்து பதறிய செல்வம் நத்தம் தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தார்.அதன் பேரில் சம்பவ இடத்திற்கு சென்ற நத்தம் தீயணைப்பு நிலைய உதவி அலுவலர் அம்சராஜன் உள்ளிட்ட வீரர்கள் விரைந்து சென்று வீட்டில் ஊர்ந்து சென்று கொண்டு இருந்த மலைப்பாம்பை பொதுமக்கள் உதவியுடன் பிடித்தனர்.பின்னர் வனத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்ட மலைப்பாம்பு வனப்பகுதியில் விடப்பட்டது.

மரம் மனிதனின் உரம்

## புதிய கடன் பயனாளர்களுக்கான பிரீமியம் அனுபவம்

**சென்னை, டிச.11-**
ஐடிஎஃப்சி ஃபர்ஸ்டு வங்கி இன்று ஃபர்ஸ்டு வாவ்! பிளாக் கிரெடிட் கார்டை அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளது - இது ஏற்கனவே உள்ள ஃபர்ஸ்ட் வாவ்! கிரெடிட் கார்டின் மேம்படுத்தப்பட்ட மற்றும் அதிகப்படியான அம்சங்கள் நிறைந்த பதிப்பாகும், இது நிலையான வைப்புத்தொகையுடன் ஆதரிக்கப்படுகிறது. இது எஃப்டி பேக்டு செக்யூர்டு கார்டில் பிரீமியம் சலுகைகளுக்காக, அணுகக்கூடிய விலையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த அட்டையின் முக்கிய சிறப்பம்சங்கள் சர்வதேச செலவினங்களில் ஜீரோ எக்ஸ் மார்க்அப், மாஸ்டர் கார்டு மற்றும் ரூபே யூபிஐ உடன் டூயல் கார்டு மற்றும் யூபிஐ செலவினங்களில் வெகுமதிகள். அட்டைதாரர்கள் ஒரு ஃபிசிகல் மாஸ்டர் கார்டு மற்றும் யூபிஐ-இயக்கப்பட்ட ரூபே வெர்சுவல் கிரெடிட் கார்டைப் பெறுகிறார்கள், இவை இரண்டும் ஒருங்கிணைந்த கடன் வரம்பு மற்றும் ஒற்றை தொகுப்பு விளக்க அறிக்கையுடன் ஒரே கணக்குடன் ஒருங்கிணைத்து இணைக்கப்பட்டுள்ளன.

ரூ.750 +ஜிஎஸ்டி (இணைதல் மற்றும் வருடாந்திர கட்டணம்) விலையில் கிடைக்கும் இந்த அட்டை, ரூ.5,000க்கும் அதிகமான மதிப்புள்ள வரவேற்பு சலுகைகளை வழங்குகிறது, பாதுகாக்கப்பட்ட கிரெடிட் கார்டு துறையில் இது ஒரு வலுவான மதிப்பு முன்மொழிவாக அமைகிறது. அட்டைதாரர்கள் பயண தள்ளுபடிகள், பிரீமியம் டைனிங் அணுகல் மற்றும் வாழ்க்கை முறை சலுகைகள் உள்ளிட்ட வரவேற்பு சலுகைகளையும், 30 நாட்களுக்குள் செய்யப்படும் முதல் இஎம்ஐ பரிவர்த்தனையில் கூடுதலாக 5% கேஷ்பேக் (ரூ.1,000 வரை) ஆகியவற்றையும் பெறுகிறார்கள்.

ஆண்டுக்கு செலவினங்கள் ரூ.1,50,000 ஐ எட்டினால், ஒட்டுமொத்த மதிப்பை அதிகரிக்க, வருடாந்திர கட்டணம் (2வது ஆண்டு முதல்) ₹750 + ஜிஎஸ்டி விலக்கு அளிக்கப்படுகிறது.

ஐடிஎஃப்சி ஃபர்ஸ்டு வங்கியின் கிரெடிட் கார்டுகள், ஃபாஸ்டேக் & Loyalty தலைவர் ஷிரிஷ் பண்டாரி கூறியதாவது: "எங்கள் முந்தைய ஃபஸ்டு வாவ்! வகைக்கான வரவேற்பு ஒரு மாறுபட்ட நுண்ணறிவை வலுப்படுத்தியது: வாடிக்கையாளர்கள் எளிமை மற்றும் மலிவு விலையை விரும்புகிறார்கள், ஆனால் அவர்கள் அனுபவம் அல்லது நன்மைகளில் சமரசம் செய்வதை உணரவில்லை. ஃபஸ்டு வாவ்! பிளாக் என்பது ஒவ்வொரு அர்த்தத்திலும் ஒரு மேம்படுத்தல், அதிக மதிப்பு, அதிக பயண திறன் மற்றும் அதிக அன்றாட பயன்பாட்டை வழங்குதல் என்ற எங்களின் பதிலை வெளிப்படுத்துகிறது.

## உரிமைகோரல் தீர்வில் நாட்டின் முன்னணி: H1-FY 2026-ல் 99.33% சாதனை படைத்த ஐசிஐசிஐ புருடென்ஷியல் லைஃப்

**கோவை, டிச.11-**
2026 ஆம் நிதியாண்டின் முதல் பாதியில் 99.33% என்ற தொழில்துறையிலேயே முன்னணி உரிமைகோரல் தீர்வு (க்ளைம் செட்டில்மெண்ட்) விகிதத்தைப் பதிவு செய்துள்ளது ஐசிஐசிஐ புருடென்ஷியல் லைஃப் இன்சூரன்ஸ். நாட்டின் முன்னணி ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களில் இந்த விகிதம் மிக உயர்ந்ததாகும். முக்கியமாக, விசாரிக்கப்படாத உரிமைகோரல்களுக்கு சராசரி உரிமைகோரல் தீர்வு நேரம் வெறும் 1.1 நாட்கள் மட்டுமே. மேலும், இந்தக் காலகட்டத்தில், நிறுவனத்தால் தீர்க்கப்பட்ட இறப்பு உரிமைகோரல்களின் மொத்த மதிப்பு ரூ. 893.38 கோடி என்பது குறிப்பிடத்தக்கது.

ஐசிஐசிஐ புருடென்ஷியல் லைஃப் இன்சூரன்ஸின் தலைமை செயல்பாட்டு அதிகாரி திரு. அமிஷ் பேங்கர் கூறுகையில், "எங்கள் க்ளைம் செட்டிமெண்ட் தீர்வு செயல்முறை மேம்பட்ட வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் நாங்கள் ஒவ்வொரு கோரிக்கையையும் மிகுந்த உணர்திறனுடன் கையாளுகிறோம்.

2026 நிதியாண்டின் முதல் பாதியில், எங்களின் க்ளைம் செட்டில்மெண்ட் தீர்வு விகிரம் 99.33%. மேலும், விசாரிக்கப்படாத உரிமைகோரல்களுக்கான எங்கள் சராசரி உரிமைகோரல் தீர்வு நேரம் வெறும் 1.1 நாட்கள் மட்டுமே. மேலும், அதே காலகட்டத்தில் மொத்தம் ரூ. 893.38 கோடிக்கு மேல் இறப்பு உரிமைகோரல்களை நாங்கள் தீர்த்து வைத்தோம்.

குறிப்பிடத்தக்க வகையில், அனைத்து ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு நாளுக்குள் தகுதியான கோரிக்கைகளைத் தீர்ப்பதாக உறுதியளிக்கும் எங்கள் "க்ளைம் ஃபார் ஸ்யூர்" முயற்சியின் கீழ், 2026 முதல் நிதியாண்டில் ரூ.157.25 கோடி மதிப்பிலான இறப்பு கோரிக்கைகளைத் தீர்த்துள்ளோம். கடந்த காலாண்டிலும் தொழில்துறையில் முன்னணி உரிமை கோரல் தீர்வு விகிதத்தைக் கொண்டிருந்த நிலையில், இந்த 2026-ன் முதல் நிதியாண்டில் 99.60% ஆக கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## டாடா பிளே தமிழ் கிளாசிக்ஸில் ரஜினிகாந்த் பிறந்தநாள் சிறப்பு திரைப்படங்கள்

**சென்னை, டிச.11-**
நடிகர் ரஜினிகாந்த் பிறந்தநாளை முன்னிட்டு, டாடா பிளே தமிழ் கிளாசிக்ஸில் ரஜினிகாந்தின் அதிரடி ஆக்ஷன் மற்றும் அட்டகாசமான ஸ்டைல் நிறைந்த சிறப்பு திரப்படங்களை ஒளிபரப்ப உள்ளதை அறிவித்துள்ளது.ரஜினிகாந்தின் பிறந்த நாளையடுத்து, டாடா பிளே தமிழ் கிளாசிக்ஸ், சேனல் #1505-இல் நமது சூப்பர் ஸ்டார் ஸ்டைலிலேயே அவரை மாஸாக நாங்கள் கௌரவிக்கிறோம்.

இதில் அவரது அனாயசமான டைமிங் காமெடி முதல், அதிரடி ஆக்ஷன் என அனைத்தையும் கண்டு மகிழுங்கள். இந்த சிறப்பு திரைப்படங்களின் வரிசையில் அவரது பொழுதுபோக்கான நடிப்பு, வசீகரம், எதிரிகளை திரையில் பழிவாங்குதல், காதல், காமெடி மற்றும் ஈடிணையற்ற ரஜினியின் ஸ்டைல் என எல்லாம் நிறைந்திருக்கும். சூப்பர்ஸ்டாரின் பிளாக்பஸ்டர் கொண்டாட்டத்திற்கு தேவையான அனைத்தும் இதில் இருக்கும் என டாடா பிளே தெரிவித்துள்ளது.

Printed Published and Owned
by S.Manimaran,
Printed at Manimaran Printers at 9, Dindigul Main Road, vilangudi, Madurai - 625 018.
Phone: 0452- 2668165, 0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 / 94

## நத்தத்தில் குண்டும், குழியுமான சாலையை சரி செய்த த.வெ.க.வினர்



**நத்தம்,டிச.11-**
திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் அரசு மருத்துவமனை முன்பு உள்ள சாலை குண்டும், குழியுமாகவும், பள்ளங்களாகவும் காட்சியளித்தது. இதனால் அவ்வழியே வந்து செல்லும் பஸ்கள், லாரிகள், கார்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றன. இது குறித்து பலமுறை புகார் குறித்தும் எந்த வித நடவடிக்கையும் இல்லை. இந்நிலையில் நேற்று மாலை அரசு மருத்துவமனை முன்பு உள்ள சாலை பள்ளத்தை தெற்கு மாவட்ட செயலாளர் நிர்மல்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் தங்களது சொந்த செலவில் சரி செய்தனர்.மேலும் பல்வேறு இடங்களில் உள்ள சாலைகளை சரி செய்யவும் அதிகாரிகளுக்கு கோரிக்கையும் விடுத்துள்ளனர்.

## நிலக்கோட்டையில் அகில உலக மனித உரிமை தினம்



**வத்தலக்குண்டு, டிச.11-**
திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை தாலுகாவில் சைட் வாய்ஸ் மற்றும் வைகை டிரஸ்ட் சார்பாக அகில உலக மனித உரிமை தினம் கடைப்பிடிக்கப்பட்டது. இதில் சம வாய்ப்பு சம அந்தஸ்து சம அங்கீகாரம் அனைவருக்கும் கிடைக்க உறுதி செய்ய வேண்டும் என்பதையும் குழந்தைகள் உரிமைகளையும் பெண்கள் உரிமைகளையும் மாற்றுத் திறனாளி நல உரிமைகளையும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன இந்த நிகழ்ச்சிக்கு சைடு வாய்ஸ் இயக்குனர் அண்ணாதுரை தலைமை உரையாற்ற திட்ட மேலாளர் விசாலினி அவர்கள் சுற்றுச்சூழலும் மனித உரிமையே விளக்கினார் தொடர்ந்து கள ஒருங்கிணைப்பாளர் விக்னேஷ் அவர்கள் ஜாதி மத இன பாகுபாடு இன்றி அனைவரும் உரிமைகள் கிடைப்பதற்கு உறுதியும் உத்தரவாதமும் செய்யப்பட வேண்டும் என்றார் இறுதியில் வைகை டிரஸ்ட் மதுமிதா நன்றியுரை கூறினார்

## நத்தம் அருகே லாட்டரி சீட்டு விற்ற இரண்டு பேர் கைது

**நத்தம்,டிச.11-**
திண்டுக்கல் மாவட்டம் நத்தம் மற்றும் சுற்றுவட்டார கிராம பகுதிகளில் அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டுகள் விற்பனை செய்யப்படுவதாக நத்தம் போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.இதையடுத்து நத்தம் சுற்று வட்டார கிராம பகுதிகளில் போலீஸ் இன்ஸ்பெக்டர் பொன் குணசேகரன், சப்-இன்ஸ்பெக்டர் அருண்நாராயணன் உள்ளிட்ட போலீசார்கள் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது முளையூர் பகுதியில் சோதனை செய்த போது அங்குள்ள பள்ளி அருகில் லாட்டரி சீட்டுகள் விற்ற அதே பகுதியை சேர்ந்த ராமு (40) என்பவரை நத்தம் போலீசார் கைது செய்தனர்.மேலும் அவரிடம் இருந்து வெளிமாநில லாட்டரி சீட்டுக்கள் பறிமுதல் செய்யபட்டது.இதைப்போலவே முளையூர் குளியல் தொட்டி பகுதியில் லாட்டரி விற்ற ஜெகன் (33) என்பவரை கைது செய்த போலீசார் அவரிடமிருந்தும் வெளிமாநில லாட்டரி சீட்டுகளை பறிமுதல் செய்தனர்.

மாண்பமிகு கூடுதல் மாவட்ட நீதிமன்றம், பரமக்குடி.
O.S.No: 13 / 2025
முருகன் மற்றும் பலர் --- வாதிகள்
--- எதிர் ---
1. சோணைமுத்து, த/பெ.கருப்பையா கோனார்,
2. மீனாட்சி சுந்தரம், த/பெ.கருப்பையா கோனார்,
3. ராஜகுமாரி, த/பெ.கருப்பையா கோனார்,
4. முத்துராமலிங்கம், த/பெ.கருப்பையா கோனார்,
5. சரஸ்வதி, த/பெ.கருப்பையா கோனார்,
மேற்படியார்களின் முகவரி: க.எண்.4/144-2, 8-வது தெரு, சாஸ்திரி நகர், ஊமச்சிகுளம், மதுரை-625014.
--- 13 முதல் 17 பிரதிவாதிகள்
அறிவிப்பு
மேற்படி வாதிகள் தாக்கல் செய்துள்ள இந்நிர் வழக்கில் 13 முதல் 17 பிரதிவாதிகள் ஆஜராகுவதற்கு 21.01.2026-ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. ஏதேனும் ஆட்சேபணை இருந்தால் மேற்படி தினம் காலை 10.00 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது தங்களது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்துக்கொள்ளவேண்டியது. தவறினால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
T.சிவானந்தன்,
O.T.கார்த்திக்,
வழக்கறிஞர்கள், மதுரை.

## அருப்புக்கோட்டை அருகே வீட்டின் பாத்ரூம் மீது பெட்ரோல் குண்டு வீச்சு
### பொதுமக்கள் சாலை மறியல்

**அருப்புக்கோட்டை,டிச.11-**
அருப்புக்கோட்டை நகராட்சி ராமசாமிபுரம் காளியம்மன் கோவில் தெருவை சேர்ந்தவர் முனிப்பாண்டி(49). டிரைவர் வேலை செய்து வருகிறார். இந்நிலையில் முனிப்பாண்டி தனது மனைவியுடன் தன் தனது உறவினர் வீட்டிற்கு சென்ற நேரத்தில் முனிப்பாண்டி வீட்டில் அவரது மகன் பார்த்தசாரதி மற்றும் பார்த்தசாரதி மனைவி மட்டும் தனியாக தூங்கியுள்ளனர். அப்போது இரவு நேரத்தில் மர்ம நபர்கள் முனிப்பாண்டி வீட்டின் பாத்ரூம் பகுதியில் பெட்ரோல் குண்டு வீசியுள்ளனர். இதில் ஜன்னல் கண்ணாடி உடைந்தது. இதை காலையில் பார்த்த முனிப்பாண்டி அருப்புக்கோட்டை நகர் காவல் நிலைய போலீசருக்கு தகவல் தெரிவித்தார். போலீசார் விரைந்து வந்து விசாரணை மேற்கொண்டு அதே பகுதியைச் சேர்ந்த ஒரு 16 வயது சிறுவனை பிடித்து விசாரணை நடத்தி வந்தனர். ஆனால் இந்த சம்பவத்தில் 6 பேர் ஈடுபட்டதாகவும் அனைவரையும் கைது செய்ய வலியுறுத்தியும் ராமசாமிபுரம் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் தூத்துக்குடி சாலையில் மாலை நேரத்தில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களிடம் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால் அனைவரின் மீது வழக்கு பதிவு செய்யும் வரை போராட்டத்தை கைவிட மாட்டோம் என இரண்டு மணி நேரமாக போராட்டத்தில் ஈடுபட்டனர். அருப்புக்கோட்டை ஏஎஸ்பி மதிவாணன் தலைமையிலான போலீசார் அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி சட்டப்படி உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்ததை தொடர்ந்து மறியலில் ஈடுபட்டவர்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர். போராட்டம் காரணமாக அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

NAME CHANGE
I, AROCKIASAMY, S/O SEBASTIAN, residing at Door No.2/703, Vaikai Nagar, North Street, Illupakudi, Karaikudi Taluk, Sivagangai District-630202, Tamilnadu , India, Shall hence for the be known as AROCKIAM S/O SEBASTIRAJ
S.AROCKIASAMY
SEBASTIAN
Illuppakudi.

## வருவாய்த்துறையில் பணி நியமன ஆணைகள்: கலெக்டர் சிம்ரன்ஜீத்சிங் காலோன் வழங்கினார்



**ராமநாதபுரம்,டிச.11-**
தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் வருவாய்த்துறையில் தேர்வு செய்யப்பட்ட ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கு கலெக்டர் சிம்ரன் ஜீத்சிங் காலோன் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமை செயலகத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் நிலஅளவை பதிவேடுகள் துறையில் 2025 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் 376 நிலஅளவர்கள் மற்றும் 100 வரைவாளர்கள் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். மேற்கண்ட நிகழ்வின் தொடர்ச்சியாக இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 15 நிலஅளவர்கள் மற்றும் 03 வரைவாளர்களுக்கான பணி நியமன ஆணைகள் ராமநாதபுரம் கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் வ.சங்கரநாராயணன், உதவி இயக்குநர் மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (நிலஅளவை) து.அண்ணாமலைபரமசிவன் மற்றும் நில அளவைத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## விருதுநகரில் இன்று வாக்குப்பதிவு இயந்திரங்கள் சரிபார்ப்பு பணி
### மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா தகவல்

**விருதுநகர்,டிச.11-**
தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு, இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின்படி, தேர்தலுக்கு முன்னதாக, தேர்தலுக்கு பயன்படுத்தப்படும் வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தையும் சரிபார்க்கும் பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டுமென்பதால், விருதுநகர் மாவட்டம், பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலக இரண்டாம் தளத்தில் வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைப்பறை கிட்டங்கியில் வைக்கப்பட்டுள்ள வாக்குப் பதிவு இயந்திரங்கள் அனைத்தும் இன்று முதல் முதல்நிலை சரிபார்ப்பு பணி நடைபெறவுள்ளது.

இன்று முதல் முதல் விருதுநகர் மாவட்டம், பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலக இரண்டாம் தளத்தில் வைப்பறை கிட்டங்கி, மாவட்ட ஆட்சியர் தலைமையில், சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் மேற்பார்வையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் கிட்டங்கி திறக்கப்பட்டு, வாக்குப்பதிவு இயந்திரங்கள், பெல் நிறுவன பொறியாளர்களால் சரிபார்க்கப்படும்.

மேலும், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அல்லது அவர்களால் நியமிக்கப்படும் முகவர்கள் காலை 09.00 மணி முதல் மாலை 07.00 வரை நடைபெறும் வாக்குப்பதிவு இயந்திரங்களின் முதல் நிலை சரிபார்ப்பு பணிகளை நேரில் பார்வையிடலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா தெரிவித்துள்ளார்.

## திண்டுக்கல்லில் பாலின சமத்துவம் குறித்து ஓவியம் வரைந்து மாணவர்கள் சாதனை



**திண்டுக்கல், டிச.11-**
திண்டுக்கல் அருகே நொச்சி ஓடைப்பட்டியில் அமைந்துள்ள அனுகிரக கல்லூரியில் தாய் கூடு பவுண்டேஷன், வேர்ல்ட் ஒன்டேர்ஸ் புக் ஆஃப் ரெகார்ட் மற்றும் ஸ்டார் கிட்ஸ் மருத்துவமனை இணைந்து நடத்திய பாலின சமத்துவம் குறித்த உலக சாதனை நிகழ்ச்சி வெகு விமர்சையாக நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கல்லூரி மாணவ மாணவியர் 250க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு 15 நிமிடத்தில் கலர் அட்டையில் பென்சில்கள் கொண்டு பாலின சமத்துவம் குறித்த லோகோவை ஓவியமாக வரைந்து உலக சாதனை படைத்தனர். தமிழகத்தில் இதுவரை பாலின சமத்துவம் குறித்த உலக சாதனை நிகழ்ச்சி 15 நிமிடத்தில் இதுவரை யாரும் செய்திடாத நிலையில் 250 மாணவர்கள் ஒரே இடத்தில் கூடி பாலின சமத்துவம் குறித்த லோகோ வரைந்து சாதனை படைத்தது இதுவே முதன்முறை குறிப்பிட்டு வேர்ல்ட் ஒன்டேர்ஸ் புக் ஆப் ரெக்கார்ட்ஸ் புத்தகத்தில் இந்த சாதனை தற்போது இடம் பெற்றுள்ளது. இதற்கான சான்றிதழ்களை தாய் கூடு பவுண்டேஷன் நிறுவனர் குணவதி, ஸ்டார் ஹிட்ஸ் குழந்தைகள் நல மருத்துவமனை இயக்குனர் திபூர்சியஸ் ,அனுகிரக கல்லூரி இயக்குனர்கள் ஆகியோர் இணைந்து பெற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் தொழிலதிபர்கள், சமூக ஆர்வலர்கள், மத நல்லிணக்க செம்மல்கள், ஆன்மீக அன்பர்கள், திருநங்கையர்கள், திருநம்பிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண். 86/2025– 2026/க(க&ப)வ–1/சென்னை/ நாள்: 09.12.2025
ஒப்பந்தம்–Lumpsum (இணையதள வழியில் மட்டும்) (ஒருஉறைமுறை)
தமிழ்நாடு ஆளுநரின் சார்பாக, கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்-1, சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் கீழ்க்காணும் பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பொதுப்பணித்துறையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி பெற்றுக் கொள்ளப்படும்.

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு இலட்சங்களில் | முன்வைப்புத் தொகை (ரூபாயில்) மற்றும் பணி முடிக்க வேண்டிய காலம் | தகுதி பெற்ற பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் |
|---|---|---|---|---|
| 1 | சென்னை-8, எழும்பூரில் உள்ள ஐஓஜி அரசு பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் தற்போதுள்ள புற்றுநோய் பிளாக்கின் மேல் கூடுதல் தளம் கட்டும் பணி | ரூ.98.66 இலட்சங்கள் | ரூ.60,000/- 6 (ஆறு) மாதங்கள் | பொதுப்பணித் துறையில் பதிவு பெற்ற வகுப்பு -4 மற்றும் அதற்கு மேல் (திருத்திய வகுப்பின்படி) |

1) ஒப்பந்தப்புள்ளி குறித்த தகவல்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கீழ்க்காணும் இணையதளத்தின் மூலம் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். http://tntenders.gov.in. 2) பணித்தள ஆய்வு சான்று உரிய செயற்பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பிக்க கடைசி நாள். 26.12.2025. 3) இணையதளம் வாயிலாக நிறைவு செய்யப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாளும், நேரமும் 30.12.2025 மாலை 3.00 மணி வரை 4) பெறப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாளும், நேரமும் 30.12.2025 மாலை 4.00 மணி 5) ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை மற்றும் ஒப்பந்தத்தில் ஏதேனும் மாற்றங்கள் / திருத்தங்கள் இருப்பின் http://tntenders.gov.in இணையதளத்தில் மட்டுமே தெரிவிக்கப்படும்
கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து.,
கட்டட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்–1, சேப்பாக்கம், சென்னை–5.
செமதொஇ/6547/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
ஒப்பந்தம்-C-FORM / ITEM RATE (இணையதள வழியில் மட்டும்)
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண்.85/2025–2026/க(க&ப)வ–1/சென்னை/நாள்: 09.12.2025
தமிழ்நாடு ஆளுநரின் சார்பாக, கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்–1, சேப்பாக்கம், சென்னை–5 அவர்களால் கீழ்க்காணும் பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பொதுப்பணித்துறையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி பெற்றுக் கொள்ளப்படும்.

| வ.எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு லட்சங்களில் | முன்வைப்புத் தொகை (ரூபாயில்) மற்றும் பணி முடிக்க வேண்டிய காலம் | தகுதி பெற்ற பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| ஒரு உறை முறை | | | | |
| 1 | சென்னை–14, ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில், OP பிளாக் மற்றும் விபத்துத் தடுப்புப் பிரிவில் மின் தூக்கியை புதுப்பித்தல் செய்யும் பணி | ரூ. 123.40 இலட்சங்கள் | ரூ.72,000/- 4 (நான்கு) மாதங்கள் | பொதுப்பணித்துறையில் பதிவு பெற்றவகுப்பு–4 மற்றும் அதற்கு மேல் (திருத்தியவகுப்பின்படி) with ESB License holders / Reputed Firms (Having previous experience & Undertaking from Reputed Lift Dealer/ manufacturer possessing the Certificate of Registration in the Approved list for erection and maintenance of Lifts issued by CEIG) |

குறிப்பு: 1. ஒப்பந்தப்புள்ளி குறித்த தகவல்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கீழ்க்காணும் இணையதளத்தின் மூலம் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். http://tntenders.gov.in. 2. பணித்தள ஆய்வு சான்று உரிய செயற்பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பிக்க கடைசி நாள்: 26.12.2025. 3. இணையதளம் வாயிலாக நிறைவு செய்யப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாளும், நேரமும் 30.12.2025 மாலை 3.00 மணி வரை. 4. பெறப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாளும், நேரமும் 30.12.2025 மாலை 4.00 மணி. 5. ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை மற்றும் ஒப்பந்தத்தில் ஏதேனும் மாற்றங்கள் / திருத்தங்கள் இருப்பின் http://tntenders.gov.in இணையதளத்தில் மட்டுமே தெரிவிக்கப்படும்.
கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து.,
கட்டட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்–1, சேப்பாக்கம், சென்னை–5.
செ.ம.தொ.இ / 6451 / ஒப்பந்தப்புள்ளி / 2025

